©
GOVERNMENT OF TAMIL NADU
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 1.60 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**EXTRAORDINARY** PUBLISHED BY AUTHORITY

No. 201] CHENNAI, MONDAY, JULY 5, 2010
Aani 21, Thiruvalluvar Aandu–2041

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர், தஞ்சாவூர்.**

**தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் ஊராட்சி ஒன்றியம், அத்திவெட்டி கிராம ஊராட்சித் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க. எண் 51/2009/அ3.)*

**No. VI(2)/267(e-1)/2010.**

தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் ஊராட்சி ஒன்றியம், அத்திவெட்டி ஊராட்சி மன்றத் தலைவர் திரு. மா. ராஜ்குமார் என்பவர் அவ்வூராட்சி கணக்குகளில் நிதி மற்றும் நிர்வாக முறைகேடுகள் செய்துள்ளது தொடர்பாக, 1994–ம் ஆண்டு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 205–ன்படி, 17–06–2009 முதல் பதவி நீக்கம் செய்யப்பட்டு அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்டது.

17–06–2009 அன்று பதவி நீக்கம் செய்யப்பட்ட திரு. மா. ராஜ்குமார் என்பவரால், 1994–ம் ஆண்டு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 205 உட்பிரிவு 12–ன்படி, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அரசு முதன்மைச் செயலாளர் அவர்களிடம் பதவி நீக்க ஆணையினை ரத்து செய்திட கேட்டு மேல் முறையீடு செய்யப்பட்டது.

அரசாணை (டி) எண் 642, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் (ப.ரா.IV), நாள் 13–11–2009–ன்படி அன்னாரது மேல்முறையீடு நிராகரிக்கப்பட்டு இறுதி ஆணை பிறப்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, பதவி நீக்கம் செய்யப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவர் திரு. மா. ராஜ்குமார் என்பவர் அரசாணை எண் 642, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை, நாள் 13–11–2009 மற்றும் மாவட்ட ஆட்சியரால் வழங்கப்பட்ட பதவி நீக்க ஆணை நாள் 01–06–2009 ஆகியவற்றை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண் W.P.(MD) No. 4058/2010 & MP (MD) No. 1 of 2010-ன்படி தொடர்ந்த வழக்கில் 09–04–2010 அன்று உயர்நீதிமன்றத்தில் தீர்ப்புரை வழங்கப்பட்டுள்ளது. அதில் மனுதாரரின் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படுவதாகவும், மேற்காணும் பதவி நீக்க ஆணை மற்றும் அரசாணை எண் 642, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை,

நாள் 13–11–2009 ஆகியவற்றை விலக்கிவைத்தும், சென்னை உயர்நீதிமன்ற 19–08–2009 தேதிய முழு ஆயத்தீர்ப்பின்படி மறுவிளக்கம் கோரும் அறிவிப்பு வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளவும் தீர்ப்புரைகள் வழங்கப்பட்டது.

மேற்காணும் வழக்கிற்கு வழங்கப்பட்ட தீர்ப்பாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படியும், 19–08–2009 தேதிய சென்னை உயர்நீதிமன்ற முழு நடுவர் ஆயத்தின் தீர்ப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையின்படியும், அத்திவெட்டி ஊராட்சி மன்றத்தின் கருத்துக்களுக்கு மாறாக, ஊராட்சி மன்றத் தலைவரை பதவி நீக்கம் செய்ய வேண்டிய அவசியத்தின் காரணங்களை ஊராட்சி மன்றத் தலைவர் திரு. மா. ராஜ்குமார் என்பவருக்கு மறுவிளக்கம் கோரும் அறிவிப்பின்மூலம் தெரிவிக்கப்பட்டு அன்னார் அதற்கு தனது மறுவிளக்கத்தினை சமர்ப்பித்திருந்தார்.

அத்திவெட்டி ஊராட்சி மன்றத் தலைவர்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அதற்கு அன்னார் அளித்த விளக்கங்கள் பட்டுக்கோட்டை வட்டாட்சியரால் நடத்தப்பட்ட சிறப்புக் கூட்டத்தில் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளரின் முடிவு ஊராட்சி மன்றத்தின் கருத்திற்கு மாறுபட்ட நிலையில் மறுவிளக்கம் கோரும் அறிவிப்புமூலம் அன்னாருக்கு தெரிவிக்கப்பட்ட காரணங்கள், அதற்கு அன்னார் அளித்துள்ள மறுவிளக்கங்கள் ஆகியவை உளத்தேர்வின்படி கூர்ந்தாய்வு செய்யப்பட்டன.

அன்னார்மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் அவர் மீதான குற்றச்சாட்டுகளுக்கு ஏற்கெனவே அளித்த விளக்கங்களையே அளித்துள்ளார். அவர் மீதான குற்றச்சாட்டுகளின் தீவிரத்தன்மையை கருத்தில் கொண்டே பதவி நீக்கம் செய்ய முடிவு செய்யப்பட்டது. ரொக்கப் புத்தகம் எழுதாமல் இருத்தல், வீட்டு வரி வசூல் செய்து ரசீது வழங்காது இருத்தல், செலவுச் சீட்டு இன்றி பெரும் தொகை ஊராட்சி நிதியிலிருந்து எடுத்தல், இதனால் ஊராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுத்துதல் ஆகிய குற்றங்களை செய்திருப்பது தெளிவாகிறது. இதற்கு ஊராட்சி உதவியாளரை குறை கூறுதல் ஏற்புடையதல்ல. நிதி மற்றும் நிர்வாக முறைகேடுகள் புரிந்தமைக்காக, புதிய தன்னிலை விளக்கம் அளிக்காத நிலையில் அத்திவெட்டி ஊராட்சி மன்றத் தலைவர் திரு. மா. ராஜ்குமார் என்பவரை ஊராட்சிமன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்ய முடிவு செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த அறிவிக்கை 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 262 (1)–ன்படியும் சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அரசு முதன்மைச் செயலர் அவர்களின் கடித ந.க. எண் 3205/ப.ரா.4/2010–1, நாள்.01–03–2010 தேதிய அறிவுரைகளின்படியும் ***தமிழ்நாடு அரசிதழில்*** சிறப்பு வெளியீடாக வெளியிடப்படும் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும் என தெரிவிக்கப்படுகிறது.

## தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் ஊராட்சி ஒன்றியம், அத்திவெட்டி கிராம ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.

*(ந.க. எண் 51/2009/அ3.)*

**No. VI(2)/267(e-2)/2010.**

தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் ஊராட்சி ஒன்றியம், அத்திவெட்டி ஊராட்சியில் திரு. மா. ராஜ்குமார் என்பவர் ஊராட்சி மன்றத் தலைவர் என்ற முறையில் அவ்வூராட்சி கணக்குகளில் நிதி மற்றும் நிர்வாக முறைகேடுகள் செய்துள்ளதற்கு அவ்வூராட்சிமன்றத் துணைத் தலைவர் திரு. ஆ. காசிநாதன் என்பவர் ஊராட்சி மன்றத் தலைவருடன் இணைந்து ஊராட்சியில் நிதி மற்றும் நிர்வாக முறைகேடு செய்ய உடந்தையாக இருந்து ஊராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுத்தியுள்ளது தொடர்பாக தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 206–ன்படி, 15–07–2009 அன்று முதல் பதவி நீக்கம் செய்யப்பட்டு ***தமிழ்நாடு அரசிதழில்*** அறிவிக்கை வெளியிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பதவி நீக்கம் செய்யப்பட்ட அத்திவெட்டி ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் திரு. ஆ. காசிநாதன் என்பவர், பதவி நீக்க அறிவிக்கையினை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண் W.P. No. 7946 of 2009-ன்படி வழக்கு தொடர்ந்து 13–4–2010 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதில் மனுதாரரின் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படுவதாகவும், பதவி நீக்க ஆணையை விலக்கி வைத்தும், சென்னை உயர்நீதிமன்ற 19–08–2009 தேதிய முழு ஆயத் தீர்ப்பின்படி மறுவிளக்கம் கோரும் அறிவிப்பு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் தீர்ப்புரைகள் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 3–ல் காணும் தீர்ப்பாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படியும், 19–08–2009 தேதிய சென்னை உயர்நீதிமன்ற முழு நடுவர் ஆயத்தின் தீர்ப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையின்படியும், அத்திவெட்டி ஊராட்சி மன்றத்தின் கருத்துகளுக்கு மாறாக, ஊராட்சி மன்ற துணைத் தலைவரை பதவி நீக்கம் செய்ய வேண்டிய அவசியத்தின் காரணங்களை ஊராட்சி மன்ற துணைத் தலைவர் திரு. ஆ. காசிநாதன் என்பவருக்கு மறுவிளக்கம் கோரும் அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்பட்டு அன்னார் அதற்கு தனது மறுவிளக்கத்தினை சமர்ப்பித்திருந்தார்.

அத்திவெட்டி ஊராட்சி மன்றத் துணைத் தலைவர்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள், பட்டுக்கோட்டை வட்டாட்சியரால் நடத்தப்பட்ட சிறப்பு கூட்டத்தில் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளரின் முடிவு ஊராட்சி மன்றத்தின் கருத்திற்கு மாறுபட்ட நிலையில் மறு விளக்கம் கோரும் அறிவிப்புமூலம் அன்னாருக்கு

தெரிவிக்கப்பட்ட காரணங்கள் அதற்கு அன்னார் அளித்துள்ள மறுவிளக்கங்கள் ஆகியவை உளத்தேர்வின்படி, கூர்ந்தாய்வு செய்யப்பட்டன.

அத்திவெட்டி ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் திரு. ஆ. காசிநாதன் என்பவரது மறுவிளக்கங்கள் கவனமாகவும் சுயமாகவும் பரிசீலனை செய்யப்பட்டது. அன்னார்மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் அவர்மீதான குற்றச்சாட்டுகளின் தீவிரத்தன்மையை கருத்தில் கொண்டே பதவி நீக்கம் செய்ய முடிவு செய்யப்பட்டது. ரொக்கப்புத்தகம் எழுதாமல் இருத்தல், வீட்டு வரி வசூல் செய்து ரசீது வழங்காது இருத்தல், செலவு சீட்டு இன்றி பெரும் தொகை ஊராட்சி நிதியிலிருந்து எடுக்க ஊராட்சி மன்றத் தலைவருடன் உடந்தையாக செயல்பட்டு ஊராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுத்துதல், காசோலைகளில் கையொப்பம் இடும்போது ரொக்கப் பதிவேடுகள் பதியப்பட்டுள்ளதா? துணை செலவு சீட்டுகள் வைக்கப்பட்டுள்ளதா? என்பதை கண்காணிக்க தவறியுள்ளது போன்ற குற்றங்களை செய்திருப்பது தெளிவாகிறது. இதற்கு ஊராட்சி உதவியாளரை குறை கூறுதல் ஏற்புடையதல்ல. நிதி மற்றும் நிர்வாக முறைகேடுகள் புரிந்தமைக்காகவும் அத்திவெட்டி ஊராட்சி மன்ற துணைத் தலைவர் திரு. ஆ. காசிநாதன் என்பவரை ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த அறிவிக்கை 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 262(1)–ன்படியும் சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் கடித ந.க.எண் 3205/ப.ரா.4/2010–1, நாள்: 1–3–2010 தேதிய அறிவுரைகளின்படியும் ***தமிழ்நாடு அரசிதழில்*** சிறப்பு வெளியீடாக வெளியிடப்படும் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும் என தெரிவிக்கப்படுகிறது.

தஞ்சாவூர்,
**2010 ஜூன் 24.**

**ம.சு. சண்முகம்,**
*மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்*
*ஊராட்சிகளின் ஆய்வாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.